**அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி**

***(எஸ்.எஸ்.ஜெயின் கல்விக் குழுமத்தின் ஒரு பிரிவு)***

***மீனம்பாக்கம் - சென்னை – 600 061***

**இருபாலர் கல்வி நிறுவனம்**

**சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த சமண சிறுபான்மை கல்வி நிறுவனம்**

**தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அவையின் மறுஅங்கீகாரம் பெற்றது**

தமிழ்த்துறை

இளங்கலைத் மாணவர்களுக்கான சிறப்புக் கருத்தரங்கம்

அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் தமிழ்த்துறையின் வளர்தமிழ் மன்றத்தின் சார்பில் இளங்கலைத்தமிழ் பயிலும் மாணவர்களுக்காச் சிறப்புக் கருத்தரங்கம் 07/09/2023 அன்று வியாழக்கிழமை பிற்பகல் 03.30 மணிக்குப் பரஸ்மல் சோர்டியா கருத்தரங்க அறையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மேனாள் பதிவாளரான முனைவர் முகிலை இராசபாண்டியன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

கருத்தரங்கம், ஜெயின் மகாமந்திரம் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே தொடங்கியது. இளங்கலைத் தமிழ் மூன்றாம் ஆண்டு மாணவி செல்வி. இரா. இரம்யா அவர்கள் நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியின் முதலாவதாக, இளங்கலைத் தமிழ் மூன்றாம் ஆண்டு மாணவன் செல்வன் ம. யோகேஷ் குமார் அவர்கள் வரவேற்புரை நல்கினார். அதனைத் தொடர்ந்து பிறமொழிகள் துறையின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ம. தாமரைச்செல்வி அவர்கள் கருத்தரங்கின் நோக்கவுரையை நல்கினார். பின்னர் தமிழ்த்துறையின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஏ. கோதண்டராமன் அவர்கள் சிறப்புவிருந்தினர் குறித்த அறிமுகவுரையை வழங்கினார். தொடர்ந்து சிறப்பு விருந்தினர்

அவர்களுக்குப் பிறமொழிகள் துறையின் ஒருங்கிணைப்பாளர் அவர்கள் பொன்னாடையும் தமிழ்த்துறை ஒருங்கிணைப்பாளர் அவர்களும் துணைப்புலத் தலைவர் அவர்களும் நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தனர். அதனைத் தொடர்ந்து "பயன்பாட்டு இலக்கணம்" எனும் தலைப்பில் சிறப்பான உரையினை வழங்கிய சிறப்பு விருந்தினர் அவர்கள் தனது இலக்கண அறிவால் மாணவர்களுக்கு இலக்கணத்தை எளிமையாகப் புரியவைத்தார். தொல்காப்பியம் முதல் தற்காலம் வரையுள்ள இலக்கண வழக்குகளை விளக்கிக் கூறினார். இளங்கலைத்தமிழ் இரண்டாம் ஆண்டு மாணவி செல்வி கு. கீதா அவர்கள் நன்றியுரை நல்கினார். இறுதியாக நாட்டுப்பண் இசைக்க, சிறப்புக் கருத்தரங்கம் இனிதே நிறைவடைந்தது.




















